மலர் 1 இதழ் 4 ஏப்ரல், 2017 ISSN : 2454-3993

# நரசிம்மவர்மன் உணர்த்தும் அறப்பண்பாடு

**இல. பூவலிங்கம்**
**உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத் துறை,**
**கே.ஜி. கலை அறிவியல் கல்லூரி,**
**கோவை**

**முன்னுரை**

பக்தி இலக்கியமானது சமுதாயத்தில் சாதிமுறையின் அடிப்படையில் நிலவிய ஏற்றத் தாழ்வுகளையும் தாழ்நிலை அடைந்தவர்களின் இயலாமை நிலைகளையும், சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வுகளைப் போக்கியது. இறையன்பு என்ற நிழலின் கீழ் மக்கள் அனைவரையும் ஒன்றுபடவும் செய்தது. பக்தி இலக்கியமானது மனிதனுக்கு மனிதன் அடிமையாகும் நிலையிலிருந்து இறைவனுக்கு அடிமையாகும் உயர் நிலைக்கு மக்களை அழைத்துச் செல்கிறது. சமுதாயத்தில் மக்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ்வாங்கு வாழ்வதற்கு மேற்கொள்ளத்தக்கவை எவை என்பதைப் பக்தி இலக்கியம் அறிவுறுத்துகிறது.

**சமுதாயம்**

தனி மனிதர்களையும் பல்வேறு அமைப்புக்களையும், நிறுவனங்களையும், குழுக்களையும், துணைக் குழுக்களையும் தன்னகத்தேகொண்ட அமைப்பாகச் சமுதாயம் விளங்குகிறது. பொதுவான உடற் கூற்றியல்புகளையும், பொதுவான விருப்பங்களையும் பொதுவான விதிகளையும் கொண்டுள்ள உறுப்பினர்களை ஒன்றிணைக்கும் சிறியதும், பெரியதும், நிரந்தரமானதுமாகிய

அமைப்பைச் சமுதாயம் என்று கூறலாம். மேலும் குறிப்பிட்ட எல்லைக்குள் வாழ்கின்ற மக்களால் மேற்கொள்ளப்பெறும் உட்செயல்களின் அனைத்து முறைகளையும் சமுதாயம் எனக் கூறலாம் என்ற விளக்கமும் உள்ளது. சமுதாயமானது தனிப்பட்டவர்களின் கூட்டமைப்பு, உரிமை மற்றும் ஒற்றுமை உணர்வு, ஏகதேசம் நிரந்தர இயல்பு முதலான சிறப்புத் தன்மைகளைக் கொண்டுள்ளதெனச் சமூகவியலாளர்கள் கருதுகின்றனர்.

### பக்தி இலக்கியம் காட்டும் பண்பாட்டு மதிப்புகள்

சமுதாயம் சிறப்புடன் செயல்படவும் சமுதாய ஒழுங்குகள் காக்கப்படவும் சமூக மதிப்புகள் தேவைப்படுகின்றன. சமுதாயத்தில் மக்கள் நல்லபடியாக வாழ்வதற்கு அவர்கள் மேற்கொள்ளத்தக்கவை எவை, மேற்கொள்ளத் தகாகதவை எவை என்பன பற்றிய கருத்துக்களை ஆராய்தல் வேண்டும். வரலாற்று நாவல்களின் நாயகனான கல்கி தமது வரலாற்று நாவல்களான பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன் ஆகிய மூன்று நாவல்களிலும் சமுதாயத்தில் வாழக்கூடிய மனிதர்கள் அனைவரும் சரிநிகர் சமானமாக வாழ்வதற்கு ஏற்றக் கருத்துக்களைக் கூறியுள்ளார். பண்பாடு என்பது சமுதாயத்தில் காணப்பெறும் நியமங்களையும், மதிப்புக்களையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த முறையாகும்.

### வாழ்வியல் விழுமியங்கள்

கல்கியின் வரலாற்று நாவல்களான பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன் ஆகிய மூன்று நாவல்களிலும் வாழ்வியல் விழுமியத்திற்கான செய்திகள் நிறைந்து காணப்படுகின்றன. அச்செய்திகளைக்கொண்டு இந்நாவல்கள் சமுதாய விழிப்புணர்வு என்ற நிலையில் சமுதாய ஒற்றுமையையும், நற்செயல்களையும் கொண்டுள்ளது என்பதை அறியலாம்.

தனிமனித ஒழுக்கமே குடும்ப மேன்மையை வளர்க்கும். குடும்ப மேன்மையே சமூகத்தை வழிநடத்தும். சமூகம் சிறக்கத் தனிமனித ஒழுக்கம் பாதுகாக்கப்பட்டு, வளர்க்கப்பட வேண்டும். தனி மனிதனுக்கு ஒழுக்கமாக உயர் நெறிகளை வகுத்துச் செல்வதும் சமூகமாகும். எதிர்வரும் சமூக அமைப்புக் கட்டுக்குலையாமல் உயர்ந்த நெறிக்கு இட்டுச் செல்ல வேண்டுமெனில், மரபு சார்ந்த, உயர்வுள்ள பண்பாட்டுக் கூறுகளை இச்சமூகம் ஒழுக்கமாக நெறிப்படுத்த வேண்டியுள்ளது. சமூகத்தின் தேவை கருதி, பண்பாட்டை மனதில் கொண்டு சமூகத்தால் தனிமனிதன் ஆட்டுவிக்கப்படுகின்றான். மனிதனின் செயல்பாடுகளினாலும், வளர் நிலைகளினாலும் கிடைக்கும் பெருமையைப் போற்றிப் புகழும் வண்ணம் அவனைச் சமூகமே முழுமையாக இயக்குகின்றது. ஒட்டுமொத்த சமூகத்தின் தேவையாக வாழ்வியல் பிழிவாகக் கருதப்படுகின்ற உயர்ப் பண்பு நெறிகளைத் தனிமனிதனுக்கு உரித்தான அறமாகப் போதிக்கப்பட்டுள்ளது. இந்த ஒழுக்கப் பண்பாட்டுக்கூறுகள் சமூக முன்னேற்றத்தில் பெரும்பங்கு கொண்டு சரியான இயங்குதலை உறுதிப்படுத்துகின்றன.

### அறம் வலியுறுத்தல்

அறம் செய்வதற்குக் காலம் நேரம் பார்க்க வேண்டியதில்லை என்பது வள்ளுவரின் ஆழமான கருத்தாக அமைகின்றது. மனிதன் தான் தோன்றிய நாள் தொட்டே தனக்கான அறங்களை வகுத்துக் கொண்டு வாழக் கற்றுக் கொண்டான். வல்லமையும், ஆதிக்க மனப்பான்மையும் கொண்டிருந்தாலும் அந்நெறியைப் பின்பற்றி மக்கள் வாழ வேண்டும் என்பது எடுத்துரைக்கப்பட்டது. மன்னன் எவ்வழியோ மக்கள் அவ்வழி என்பதால், மக்களின் ஒழுக்கக் கோட்பாடுகளையும்,

அறக்கருத்துக்களையும் நெறிப்படுத்தினர். அறநெறியைப் போற்றிப் பாதுகாக்கும் பண்பினால் பிறரை மதிக்கும் பண்பும், நட்புணர்வும் மேலோங்கி, பகைவனுக்கும் அருளும் மனித உயர்ப்பண்பு நெறிகள் வலுப்படுத்தப்படுகின்றன.

**நரசிம்மவர்மர்**

கல்கி நரசிம்மவர்மரை தனது இரண்டு நாவல்களிலும் அறிமுகப்படுத்துகிறார். சிவகாமியின் சபதம் நாவலில் கதைத் தலைவராகவும், சிவகாமியின் காதலனுமாகவும், பார்த்திபன் கனவு நாவலில் குந்தவியின் அன்புத் தந்தையாகவும் அறிமுகப்படுத்துகிறார். மன்னன் எவ்வழியோ மக்கள் அவ்வழி என்ற கோட்பாட்டிற்கு இணங்க வாழ்ந்தவன் நரசிம்மவர்மன். தான் நடன கலாராணியான சிவகாமியை விரும்பினாலும் தன் தந்தையின் சொல்லைக் காப்பாற்றி மக்களை நல்வழியில் அற உணர்வோடு கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காகத் தந்தை சிவகாமியைச் சந்திக்கக் கூடாது என்று சத்தியம் வாங்கிட அதை நிறைவேற்றி, சிவகாமியைச் சந்திக்காமல் கோட்டையை விட்டு வெளியேறாமல் இருக்கிறார். இதற்கு என்ன காரணம்? தந்தை மகேந்திரவர்மன் தன் மக்களின் மீது வைத்திருந்த பாசம், அன்பு தான் காரணம். நரசிம்மவர்மனின் தந்தை மக்களின் ஒழுக்கக் கோட்பாடுகளையும், அறக்கருத்துக்களையும், பிறரை மதித்தல், நட்பு, பகைவனுக்கும் அருளுதல் போன்ற உயர்ப்பண்புகளின் வெளிப்பாடாக இருக்கிறார். ஆதலால் தனது தந்தையின் சொல்லை மீறாமல் மக்களுக்காகக் காதலியையும் சந்திக்காமல் இருக்கிறார். இதற்குக் காரணம் அறம் என்னும் ஒழுக்கப் பண்பே எனலாம்.

கல்கியின் 'சிவகாமியின் சபதம்' நாவலில் நரசிம்மவர்மரை இளைஞனாகவும் போரை விரும்பும் வீரப் புதல்வனாகவும், சிவகாமியின் உள்ளம் கவர்ந்த காதலனாகவும் படைத்து உள்ளார். நரசிம்மவர்மன் வீரத்தை வெளிப்படுத்த தக்க நேரத்தை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டு இருக்கிறான். புலிகேசியின் படை, படையெடுத்து வருகிறது என்று அறிந்தவுடன் போருக்குப் போகத் துடிக்கிறான். ஆனால் மகேந்திரர் "கோட்டையை விட்டு வெளியே வரக் கூடாது" என்று கூற அதன்படி நடப்பதாக அவர் சத்தியமும் செய்து தருகிறார். நரசிம்மவர்மர் அச்சம் சிறிதுமற்ற, ஆற்றல் பெரிதும் கொண்ட அடலேறு. ஆனால் தந்தையின் சொல் மீறாதவன். அவர் சிவகாமிக்கு எழுதிய ஓலையில் இந்த உலகத்தில் என்னால் செய்ய முடியாத காரியம் ஒன்று இருக்கிறது என்றால் அது என் தந்தையின் சொல்லை மீறுவதுதான். நெற்றிக்கண் படைத்த சிவபெருமானே என் முன் தோன்றினாலும் என் தந்தையின் கட்டளைக்கு விரோதமாக ஒரு காரியத்தை நான் செய்ய மாட்டேன் என்று கூறுகிறார். முடிவில் மக்களுக்காக தந்தையின் சொல்லுக்குக் கட்டுப்பட்டுப் பாண்டிய நாட்டு இளவரசியை மணந்து கொள்கிறான். ஆரம்பத்தில் சிற்பியின் மகளான சிவகாமியின் மேல் கொண்ட காதலின் காரணமாக நாட்டையே துறக்கச் சித்தமாக இருந்தார். "சிவகாமி! நீ மட்டும் ஒரு வார்த்தை சொல்லு! இராஜ்யம் எக்கேடாவது கெடட்டும் என்று விட்டுவிட்டு உன்னோடு இருந்து விடுகிறேன். உன்னைவிட எனக்கு இராஜ்யம் பெரிதல்ல" என்று கூறும் நரசிம்மவர்மனின் காதல் சிவகாமி சிறைப்பட்ட பிறகு மாறுகிறது. சிவகாமி வாதாபிக்குப் போகச் சம்மதித்தாள் என்று கேட்டதுமே, மாமல்லரை ஆயிரம் தேள்கள் கொட்டியதைப் போல் இருந்தது. இவர்களின் பரிசுத்தமான அன்பில் ஒரு துளி நஞ்சு கலந்தது போல் இருந்தது என்று கூறலாம். சிவகாமியின் சபதத்தை நிறைவேற்றுவதற்காக நரசிம்மர் பெரும்படையுடன் வாதாபி நோக்கிச் செல்லும்முன் அவர் மனைவி வானமாதேவி, சிவகாமியின் மீது தாங்கள் கொண்ட காதல் தனக்கு முன்னரே தெரியும் என்று கூறி, சிவகாமியை அழைத்து வந்ததும் தான் விலகிக் கொள்வதாகக் கூற, சிவகாமியின் சபதத்தை நிறைவேற்றி முடிவில் தனக்காகவும், அப்பாவுக்காகவும்,

மக்களுக்காகவும் சிவகாமியை மறந்து மக்களுக்கு அறச்செயல்களைச் செய்யும் நரசிம்மனாக கல்கி இவரைப் படைத்து இருக்கிறார். 'சிவகாமியின் சபதத்தில்' காதலில் தோல்வியடைந்த நரசிம்மன், பார்த்திபன் கனவில் தாயில்லாத் தனது பெண்ணான குந்தவியைப் பார்த்து "குழந்தாய், இந்த உலகில் அன்பு ஒன்றுதான் சாசுவதமானது. மற்றதெல்லாம் அநித்தியம். இரண்டு இளம் உள்ளங்கள் அன்பினால் ஒன்று சேரும்போது, அங்கே அன்பு வடிவமான கடவுளே சாந்நித்தியமாயிருக்கிறார். அவ்விதம் அன்பினால் சேர்ந்த உள்ளங்களுக்கு மத்தியில் நின்று தடைசெய்ய யாருக்குமே பாத்தியதை கிடையாது தகப்பனுக்குக் கூட கிடையாதுதான். ஆகையால் நீ சோழ நாட்டு இளவரசனை மணம் புரிய விரும்பினாயானால் அதை ஒரு நாளும் நான் தடை செய்யேன்" என்று கூறுகிறார்.

இறுதியில் விக்கிரமனைச் சுதந்திரச் சோழ நாட்டின் மன்னராக்கும் நரசிம்மர் தம் மகளையும் அவன் மனைவியாக்கி மகிழ்கிறார். ஆரம்பத்தில் போர்க்களத்தில் பார்த்திபனிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இறுதிவரைக்கும் அறவழியில் நின்று தம் இலட்சியத்தில் தோற்றாலும் பார்த்திபனுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதில் வெற்றி பெறுகிறார் நரசிம்மர். பார்த்திபன் கனவு நாவலில் மக்கள் இவர்மேல் வைத்திருந்த பக்திக்கு மற்றொரு காரணம் இவர் மக்களுக்கு செய்த அறந்தான் காரணம். இவர் தனது மக்களை அன்போடும், கருணையோடும் மக்களுக்கு எந்த நேரத்தில் எது தேவையோ அதை நிறைவேற்றிக் கொண்டிருந்தார். மாமல்லர் நரசிம்மர் ஒருமுறை மூன்று தினங்கள் மாமல்லபுரத்தில் தங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அவர் அங்கு தங்கி இருந்த அந்த மூன்று நாட்களும் அந்த நகரமே மக்களால் கோலாகலமாயிருந்தது. இதன் மூலம் மக்கள் இவர் மேல் வைத்திருந்த மரியாதையை அறியலாம். நகரவாசிகள் மன்னனுக்காகக் காலையில் தத்தம் வீடுகளில் வாணி பூஜை நடத்தினார்கள். பிற்பகலிலும் சாயங்காலத்திலும் பொது இடங்களில் கலைமகளின் திருநாளைக் கொண்டாடினார்கள். கோயில்கள், மடாலயங்கள், கலா மண்டபங்கள், வித்யாசாலைகள், இவைகள் எல்லாம் அமோகமான அலங்காரங்களுடன் விளங்கின. மன்னனும், மகளும் அங்கு செல்லும்போது மக்கள் பல்வேறு வாழ்த்தொலிகளைத் தெரிவித்தார்கள். மக்கள் இவர்மேலும் சிற்பங்கள் மேலும் வைத்திருந்த பக்தியைப் பார்த்த நரசிம்மன் "காஞ்சிபுரமும், மாமல்லபுரமும் பல்லவ சாம்ராஜ்யத்தின் இரு கண்கள்" என நினைத்த நரசிம்மன் மக்களுக்காக வெகு விரைவில் புலிகேசி படையெடுப்பினால் நின்ற இந்த சிற்பத் திருப்பணியை மீண்டும் தொடங்க வேண்டும் என்று கூறுகிறார். புலிகேசியைக் கொன்று வாதாபியைத் தீக்கிரையாக்கிவிட்டுத் திரும்பிய பிறகு சில காலம் தேசத்தில் இருந்த மக்களின் பஞ்சம் போன்ற பிணிகளை நீக்கும் முக்கியமான வேலைகளிலும், உள்நாட்டுப் பகைகளை அழிக்கும் முயற்சியிலும் தான் ஈடுபட்டு இருந்ததால் சிற்பக் கலையில் தான் ஈடுபட முடியாமல் போய் விட்டது என்று கூறுகிறார். கலையைவிட மக்களின் நலம் தான் முக்கியம். மக்கள் இப்பொழுது நல்லபடியாக இருப்பதால் மீண்டும் சிற்பக்கலைப் பணியை தொடர்வதாகக் கூறுகிறார். சிற்பக் கலையில் மிகுந்த ஆர்வமாக இருந்தாலும் மக்களைக் காப்பதே மன்னனின் முதல் கடமை, மக்களைக் காப்பாற்றி அவர்களின் பஞ்சம் போன்ற பிணிகளை அகற்றி மக்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்து மக்களுக்காகவே வாழ்பவர் மாமல்லன் நரசிம்மன். அறம் வலியுறுத்தல் என்ற பண்புக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்பவன் நரசிம்மவர்மன் என்பதை இவற்றின் மூலம் நாம் தெளியலாம்.

**நிறைவாக**

கல்கி தமது நாவல்களில் ஆங்காங்கே பாத்திரங்களின் மூலம் தனிமனித விழுமியத்தில் முதல் நிலையில் இருக்கும் அறம் வலியுறுத்தல் என்ற பண்பிற்கு எடுத்துக் காட்டுகளாகக் கதாபாத்திரங்களைப்

படைத்துள்ளார். மக்களிடையே உயர்ந்தவன், தாழ்ந்தவன், என்ற பண்பும் இருக்கக் கூடாது, அதே நேரத்தில் கைமாறு கருதாது பொழியும் மழையைப் போன்று மற்றவர்க்குக் கொடுப்பதில் இருக்க வேண்டும் என்ற கருத்தையும் மக்களிடையே கொண்டுவர வேண்டும் என்ற எண்ணத்துடன் சில பாத்திரங்களை அவர் படைத்துள்ளார். பொறாமை, கோபம், பேராசை, தீயசொல் இவற்றை தவறு என்று எப்பொழுது ஒரு தனிமனிதன் உணருகிறானோ அப்பொழுது அவன் அறத்தோடு நின்று செயல்படுவான். எனவேதான் வாழ்தலில் உயர்ந்த ஒழுக்கமாக அறப்பண்பு கருதப்படுகிறது. இந்த அறக்கருத்துக்களைக்கொண்டு கல்கியின் நாவல்களை வாசிக்கும் பொழுது நிறைய கதாபாத்திரங்கள் அதில் அடங்கும் என்பது புலனாகிறது.